126
22 JUL 2021

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை

1. அறிமுகம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் இடமாற்றமானது வடக்கு மாகாண பொதுச்சேவையினை மிகவும் வினைத்திறனுடையதாகக் கொண்டு செல்வதற்கும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள பதவியணியினரின் உயர்ந்தபட்ச நலன்புரி விடயங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக்கொள்கையானது 1817/30ம் இலக்க 2013.03.07ம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் XVIIIம் அத்தியாய ஏற்பாடுகளைத் தழுவி தயாரிக்கப்பட்டு கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

2. **வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படும் அலுவலகர்களின் விபரங்கள்**

2.1. வடக்கு மாகாணத்தின் பின்வரும் இணைந்த சேவையிலுள்ள அலுவலகர்களுக்கு இவ் வருடாந்த இடமாற்றக் கொள்கையானது பொருத்தமானது.

இல	சேவை	அனுமதிக்கப் பட்ட ஆளணி
1	மொழி பெயர்ப்பாளர் சேவை	17
2	அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை	1948
3	மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை-அதிசிறப்பு	104
4	மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை	1792
5	இலங்கை தொழில்நுட்பவியல் சேவை (தொழிநுட்ப உத்தியோகத்தர்)	358
6	இலங்கை தொழில்நுட்பவியல் சேவை (படவரைஞர்)	37
7	மாகாண தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை (உதவியாளர்)	11
8	மாகாண சாரதி சேவை	516
9	அலுவலகப் பணியாளர் சேவை	379

குறிப்பு:- மேற்குறித்த இணைந்த சேவை உத்தியோகத்தர் ஆளணியானது வடக்கு மாகாணசபைக்குட்பட்ட அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2.2. சேவை நிலையம் ஒன்றில் அலுவலர் ஒருவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சேவைக்காலம் தொடர்பான விபரங்கள்

2.2.1. தற்போதைய சேவை நிலையத்தில் தொடர்ச்சியான 03 வருட கால சேவையினை பூர்த்தி செய்த அலுவலகர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள்.

2.2.2. முதல் நியமனம் பெற்று தற்போதைய சேவை நிலையத்தில் கடமையாற்றும் அலுவலகர்களுக்கு பிரிவு 2.2.1 பொருத்தப்பாடாக அமையாது.

2.2.3. பந்தி 3.1 இல் குறிப்பிட்ட மனங்கவர் சேவை நிலையங்களில் 03 வருட சேவைகாலத்தினையும் ஏனைய சேவை நிலையங்களினை பொறுத்த வரையில் ஒரே சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தினையும் பூர்த்தி செய்துள்ள சகல அலுவலகர்களும் கட்டாயமாக வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

2.2.4. பின்வரும் மனங்கவர் சேவை நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் அதிகபட்ச சேவைக்காலம் 03 வருடங்களாகும்.

(i). மாகாண இறைவரித் திணைக்களம்

(ii). மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

125
22 JUL 2021
Northern Province

3. சேவை நிலையங்களை வகைப்படுத்தல்

3.1 மனங்கவர் சேவை நிலையமாக கருதப்படுவது பின்வரும் திணைக்களங்களாக இருக்கும்.

(i). வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம்
(ii) வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

4. முறைமை மற்றும் ஏனைய விடயங்கள்

4.1 இணைந்த சேவையைச் சேர்ந்த அனைத்து அலுவலகர்களும் இடமாற்றக் கொள்கையின் பிரிவு 2.2.3 இற்கு அமைவாக வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

4.2 வருடாந்த இடமாற்ற நடவடிக்கையில் தூர பிரதேச சேவை நிலையம் ஒன்றில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அலுவலர் ஒருவர் வேறு இடத்திற்கு இடமாற்றக் கோரிக்கை விடுத்திருக்கும் போது அதனை நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர் இடமாற்றம் கோரும் சேவை நிலையத்தில் இவ்வருடாந்த இடமாற்றக் கொள்கையில் 2.2.3ம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தகமையினை பூர்த்தி செய்தவர்களில் மிக நீண்டகாலம் சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் இடமாற்றப்படுவார்கள்.

4.3 இடமாற்ற சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியில் இருந்து அவ்வாண்டின் டிசம்பர் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் ஒத்துமாறல் இடமாற்றத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

4.4 பிரிவு 2.2.3 இற்கு அமைவாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்காத அலுவலகர்களின் பெயர்ப்பட்டியல் இடமாற்ற செயற்பாட்டிற்காக இடமாற்றச்சபைக்கு கையளிக்கப்படும். அவ்வாறன அலுவலருக்கு இடமாற்றக்கட்டளை வழங்கப்பட்ட பின்னர் அவர்களது மேன்முறையீடுகள் மிளாய்வின் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

4.5 வருடாந்த இடமாற்ற நடைமுறையின் போது அலுவலகத்தின் சேவையை பாதிக்காத வகையில் விண்ணப்பதாரிகளின் கோரிக்கை கருத்திற் கொள்ளப்படுவதுடன் இடமாற்றத்திற்கு தகைமை பெறும் உத்தியோகத்தர்களின் கடமைகளை வேறு உத்தியோகத்தருக்கு பயிற்றுவித்து இடமாற்றம் வழங்கப்படும் உத்தியோகத்தரை உடன் விடுவிக்க கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட எல்லா சந்தர்ப்பத்திலும் குறித்த சேவை நிலையத்தின் சிரேஸ்ட மற்றும் கனிஸ்ட அலுவலகர்களுக்கிடையில் சமநிலை பேணப்படும்.

4.6 ஒவ்வொரு வருடத்திற்குமான வருடாந்த இடமாற்ற தீர்மானங்களை உரிய திகதியில் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் / திணைக்கத்தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7. குறித்த சேவை நிலையத்தின் குறித்த பதவிக்கான/சேவைக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி கருத்திற்கொள்ளப்பட்டு மிகை ஆளணி உத்தியோகத்தர் இடமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் இடமாற்றத்திற்கான பதிலீடு வழங்கப்படமாட்டாது.

5. சேவைக் காலத்தை கணக்கிடல்

5.1 ஒவ்வொரு வருடாந்த இடமாற்றத்தின் போதும் இடமாற்ற விண்ணப்பம் கோரப்படும் ஆண்டிற்கான முதல் வருடத்தின் டிசம்பர் 31ம் திகதி வரையான சேவைக்காலப்பகுதியே கவனத்தில் கொள்ளப்படும். (உ+ம் :- 2022ம் வருடத்திற்கு இடமாற்ற விண்ணப்பம் கோரப்படின் 2021.12.31ம் திகதி வரை)

5.2 அலுவலர் ஒருவரின் சேவை நிலையமொன்றினது சேவை காலத்தினை கணிப்பீடும் போது உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் வழங்கப்பட்ட மூன்று மாதத்திற்கு மேற்பட்ட தற்காலிக இணைப்பு காலம் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

124
22 JUL 2021

6. **அலுவலர் ஒருவரின் இடமாற்றம் தொடர்பில் தீர்மானிக்கும் போது பின்வரும் விசேட விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படலாம்**

6.1 உத்தியோகத்தர் ஒருவரின் துணை பொலிஸ் அல்லது முப்படையில் செயற்பட்டு கடமையின் போது முடக்கப்பட்டுள்ளதாக எழுத்து மூலச் சான்றுகளை சமர்ப்பிக்கும் போது அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இடமாற்றம் மேற்கொள்ளப்படுவதுடன் இடமாற்றக் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.2 கணவன் மனைவி ஆகிய இருவரும் அரச சேவையைச் சேர்ந்தவர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இருவரையும் ஒரே மாவட்டத்தில் கடமையாற்ற அனுமதிப்பதில் இடமாற்றச்சபை இயன்றளவில் கவனம் செலுத்த வேண்டும்.

6.3 தூரப் பிரதேச சேவை நிலையங்களுக்கு இடமாற்றத்திற்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் போது முன்பள்ளி பருவ பிள்ளைகள், பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் இருக்கும் திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பதிலாக மணமாகாத உத்தியோகத்தர்களும், பாடசாலை செல்லும் பிள்ளைகள் இல்லாத திருமணமான உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்படலாம்

6.4 மாற்றுத்திறனாளிகள், முன்பள்ளி பருவ பிள்ளைகள், பாடசாலை செல்லும் பிள்ளைகள் மற்றும், நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருக்கின்ற பிள்ளைகள், வாழ்க்கைத்துணை, தங்கிவாழ்வோர் உள்ள அலுவலகர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை குறிப்பிட்டு உரிய மருத்துவச் சான்றிதழ்களுடன் தமது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படலாம்.

7. **வருடாந்த இடமாற்றத்தில் உள்ளடக்கப்படாத உத்தியோகத்தர்கள்**

7.1 58 வயதை அடைந்த அலுவலர்கள் அவர்களால் இடமாற்றக் கோரிக்கை முன்வைக்கப்படாதவிடத்து இடமாற்றத்திற்கு உட்படுத்தலாகாது.

7.2 55 வயதைத் தாண்டிய அலுவலகர்கள் மாவட்டத்திற்குள்ளே இடமாற்றம் செய்யப்படுவார்களாயினும் அவர்களது கோரிக்கை இன்றி மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்படலாகாது.

7.3 வருடாந்த இடமாற்றத்திற்கு தகுதி பெற்றிருந்தும் ஓய்வு பெறுவதை எதிர்பார்த்து அதனை காரணமாக கொண்டு வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலகர்களால் ஓய்வு அனுமதி பெறுவதற்கான ஆவணங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் மாத்திரமே இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

8. **தொழிற்சங்கங்க அலுவலர்களுக்கான இடமாற்ற சலுகை**

குறித்த சேவையின் வகுதிக்குரிய தொழிற்சங்கமொன்றில் தாய் சங்கத்தின் தவிசாளர் / செயலாளர் / பொருளாளர் மற்றும் மத்திய நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்கள் மாற்றப்படுகின்றாரெனில் உரிய தொழிற்சங்கச் செயலாளரின் பரிந்துரையை கவனத்திற் கொள்ளல் வேண்டும். இந்த இடமாற்ற செயற்திட்டத்தின் போது தொழிற்சங்கம் எனக் கருதப்படுவது யாதெனில், ஒரு சேவையை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களாகும். இந்த சலுகையை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் சகல தொழிற்சங்கங்களும் தமது தொழிற்சங்க அலுவலர் தொடர்பான விபரங்களை தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXV இல் பிரிவு 7.5 இன் பிரகாரம் உரிய இடமாற்ற சபைகள் ஒன்று கூடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் சமர்ப்பிப்பித்தல் வேண்டும். இதற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. மேலும் இதன் பின்னர் வருடாந்த இடமாற்றத்திற்கு தகமையுடைய தாய்சங்கத்தின் மேற்படி பதவி வகுதியை கொண்ட தொழிற்சங்க அலுவலரொருவர் தன் விருப்பிற்குரிய நிறுவனங்களில் தங்கியிருப்பதற்கு இப்பிரதிநிதித்துவத்தை சம்பந்தப்படுத்தி கொள்ளலாகாது.

123
22 JUL 2021

9. வருடாந்த இடமாற்றச்சபை

9.1. வருடாந்த இடமாற்றச்சபை உறுப்பினர்கள் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அவர்களின் சிபார்சுடன் பிரதம செயலாளர், வடக்கு மாகாணம் அவர்களால் நியமிக்கப்படுவார்கள்

9.2. இடமாற்றங்களுக்காக கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கவனத்திற்கொண்டு அந்தந்த சேவைகளுக்காக போதியளவு விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் சம்பந்தப்பட்ட சேவைகளுக்காக வெவ்வேறாக இடமாற்ற சபைகளை அமைத்தல் வேண்டும்.

9.3. வருடாந்த இடமாற்றச்சபை உள்ளடக்கம்

தலைவர் : நாடளாவிய சேவையைச் சேர்ந்த விசேட / தரம் I இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்.

உறுப்பினர் (1) : நாடளாவிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்

உறுப்பினர் (2) : பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாக அலுவலகத்தின் உதவிப் பிரதம செயலாளர் அல்லது நிர்வாக உத்தியோகத்தர்

தொழிற்சங்க பிரதிநிதி - இடமாற்ற சபைக்குரிய சேவையிலுள்ள மொத்த அலுவலகர்களின் எண்ணிக்கையின் 15% அல்லது அதனை விட அதிகமான உறுப்பினர்களை கொண்ட அச்சேவைக்குரிய தொழிற்சங்கத்தின் பிரதிநிதி அல்லது முழுநேர தொழிற்சங்க நடவடிக்கைக்காக விடுவிக்கப்பட்டுள்ள பிரதிநிதி.

10. வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் மீதான மீளாய்வு

10.1 வருடாந்த இடமாற்ற மீளாய்வு சபை உறுப்பினர்கள் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அவர்களின் சிபார்சுடன் பிரதம செயலாளர், வடக்கு மாகாணம் அவர்களால் நியமிக்கப்படுவார்கள்

10.2 மீளாய்வுச் சபையின் உள்ளடக்கம்

தலைவர் : நாடளாவிய சேவையைச் சேர்ந்த விசேட / தரம் I இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்.

உறுப்பினர் (1) : நாடளாவிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்

உறுப்பினர் (2) : பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாக அலுவலகத்தின் உதவிப் பிரதம செயலாளர் அல்லது நிர்வாக உத்தியோகத்தர்.

10.3 அலுவலர் ஒருவர் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து அவரின் விருப்பத்தெரிவுக்கு அமைவான சேவை நிலையம் வழங்கப்படுமிடத்து அதனை இரத்து செய்யவோ அதனை மாற்றி வழங்கவோ செய்யப்படும் மீளாய்வு கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10.4 இடமாற்றக் கட்டளைகளுக்கு எதிராக செய்யப்படும் மீளாய்வு கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு பார்ப்பதற்காக மீளாய்வு சபைகளால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பரிசீலனை செய்ததன் பின்பு தீர்மானிக்கப்படும்.

- இடமாற்றக் கொள்கைக்கு அமையாத வண்ணம் மேற்கொள்ளப்பட்டுள்ள இடமாற்றங்கள்
- அலுவலகர்களின் கோரிக்கைகள் நிறைவேறாத சந்தர்ப்பங்கள்
- அலுவலகர்களின் கோரிக்கைக்கு முரணாக செய்யப்பட்ட இடமாற்றங்கள்
- இடமாற்றங்கள் கோரப்பட்ட திகதிக்கு பின்னர் அலுவலருக்கு நேர்ந்த எதிர்பாராத இடர்கள், சுகயீனங்கள் போன்ற அனுதாபத்துடன் நோக்க வேண்டிய நிலைகளை பற்றி ஏற்றுக்கொள்ளத்தக்க சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்.

11. இடமாற்ற கால அட்டவணை

122
22 JUL 2021

யூன் 15 இற்கு முன்னர்	இடமாற்றசபைகளை அமைத்தலும், இடமாற்ற திட்டத்தை தயாரித்தலும்
யூன் 30 இற்கு முன்னர்	வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கை வெளியிடுதல்
யூலை 30 இற்கு முன்னர்	பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களை பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்
ஆகஸ்ட் 31 இற்கு முன்னர்	இடமாற்றச் சபை இடமாற்றம் தொடர்பிலான இறுதித்தீர்மானங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி
செப்ரெம்பர் 15 இற்கு முன்னர்	இடமாற்ற தீர்மானங்களை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவித்தல், மீளாய்வுச்சபையை அமைத்தல்
செப்ரெம்பர் 30 இற்கு முன்னர்	இடமாற்றங்கள் பற்றிய மீளாய்வு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி
அக்டோபர் 15 இற்கு முன்னர்	மீளாய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் இறுதித்தீர்மானங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி
அக்டோபர் 30 இற்கு முன்னர்	மீளாய்வு தீர்மானங்களை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவித்தல்

12. வருடாந்த இடமாற்ற கட்டளைகளுக்கு திருப்தியுறாத மேன்முறையீட்டு கோரிக்கைகளை சமர்ப்பித்தல்

2013.07.11 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின்,

1. அத்தியாயம் XXI பிரிவுகள் 230, 231 இன் பிரகாரம் இடமாற்றக் கட்டளைக்கு எதிராக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு ஒன்றினை உரிய அலுவலக தொடர்பாடலுக்கூடாக சமர்ப்பிக்க முடியும்.

2. அத்தியாயம் XX பிரிவு 223 இன் பிரகார்ம் இடமாற்றக் கட்டளை குறித்த உத்தியோகத்தருக்கு கிடைத்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்படி முறையீட்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத மேன்முறையீடுகள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு முன்னிலைப்படுத்தப்படாது நிராகரிக்கப்பட முடியும்.

3. அத்தியாயம் XX பிரிவு 228 இன் பிரகாரம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினது தீர்மானம் தொடர்பில் அதிருப்தி அடையின் அலுவலர் அத்தீர்மானம் கிடைக்கப்பெற்று 14 நாட்களினுள் தனது மேன்முறையீட்டினை மாகாண கௌரவ ஆளுநருக்கு சமர்ப்பிக்க முடியும்.

121

22 JUL 2021

13. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

1. இடமாற்றங்கள் கோரும் போது அதற்காக தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படும் மாதிரி படிவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு அலுவலகரைப் பற்றிய சரியான பூரணமான தகவல்களை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். பொய்யான பூரணமற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் இப்பட்டியலை தயாரித்து செவ்வை பார்த்த உத்தியோகத்தர்கள் பொறுப்பாக்கப்படுவதுடன் அவர்கள் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

3. இடமாற்றக்கட்டளை பெற்றுள்ள அலுவலர் ஒருவரை அவ் இடமாற்றம் அமுலாகும் திகதிக்கு பின்னர் அந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்காதிருந்தால் அது இடமாற்றக் கொள்கைக்கு முரணானதாகும் என்பதுடன் இவ்வேற்பாடுகளுக்கு முரணாக நடந்து கொள்கின்ற திணைக்களத் தலைவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவிக்கப்படும்.

4. இவ்விடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை வடமாகாண அமைச்சுக்கள் திணைக்களங்கள் அவற்றின் கீழ்வரும் சகல அலுவலகங்களிலும் கடமையாற்றும் இணைந்தசேவை உத்தியோகத்தர்களும் அறிந்து கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை திணைக்களத் தலைவர்கள் எடுத்தல் வேண்டும்.

5. பின்னிணைப்புக்கள்

- இடமாற்றத்தினை எதிர்பார்க்கும் அலுவலகர்களால் நிரப்பப்படும் விண்ணப்பப்படிவம் (Form/CS/ATR/01) – பின்னிணைப்பு I
- வருடாந்த இடமாற்றங்களை கோரும் அலுவலகர்களின் சேவைக்கால ஒழுங்கில் விண்ணப்பங்களின் பட்டியல் (Form/CS/ATR/02) – பின்னிணைப்பு II
- தற்போதய சேவை நிலையத்தில் 05 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத அலுவலகர்களின் சேவைக்கால ஒழுங்கிலான பட்டியல் (Form/CS/ATR/03) – பின்னிணைப்பு

No. NP/01/02/GN/29
Date 17.06.2021
Recommended & Forwarded

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

Chief Secretary
Northern Province

பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம் ஊடாக,

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கை தயாரிக்கப்பட்டு தங்கள் அனுமதிக்காக சிபார்சு செய்யப்பட்டு முன்னளிக்கப்படுகின்றது

.....
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்

ம.பற்றிக் டிமாஞ்சலி
பிரதிப் பிரதம செயலாளர்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
வடமாகாணம்.

120

22 JUL 2021

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு தங்கள் அனுமதிக்காக தயவுடன் சமர்ப்பிக்கப்படுன்றது.

.....

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

அனுமதிக்கப்படுகின்றது / ~~அனுமதிக்கப்படவில்லை~~

.....

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

2021.07.13

பி.எஸ்.எம்.சார்ள்ஸ்
ஆளுநர்
வட மாகாணம்

136

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை

11. இடமாற்ற கால அட்டவணை

யூன் 15 இற்கு முன்னர்	இடமாற்றசபைகளை அமைத்தலும், இடமாற்ற திட்டத்தை தயாரித்தலும்
யூன் 30 இற்கு முன்னர்	வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கை வெளியிடுதல்
யூலை 30 இற்கு முன்னர்	பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிப் படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களை பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்
ஆகஸ்ட் 31 இற்கு முன்னர்	இடமாற்றச் சபை இடமாற்றம் தொடர்பிலான இறுதித்தீர்மானங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி
செப்ரெம்பர் 15 இற்கு முன்னர்	இடமாற்ற தீர்மானங்களை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவித்தல், மீளாய்வுச்சபையை அமைத்தல்
செப்ரெம்பர் 30 இற்கு முன்னர்	இடமாற்றங்கள் பற்றிய மீளாய்வு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி
அக்டோபர் 15 இற்கு முன்னர்	மீளாய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் இறுதித்தீர்மானங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி
அக்டோபர் 30 இற்கு முன்னர்	மீளாய்வு தீர்மானங்களை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவித்தல்
நவம்பர் 15 இற்கு முன்னர்	இடமாற்றங்கள் பற்றிய மீளாய்வு தீர்மானங்கள் தொடர்பிலான மேன்முறையீடுகளை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் இறுதித்திகதி

My No: NP/01/02/GN/29
Date: 21/06/2023
Recommended & Forwarded
எஸ்.எம். சமன் பந்துலசேன
பிரதம செயலாளர்
வடமாகாணம்

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம் ஊடாக,

தங்களின் NP/07/ET/2/01/10/002ஆம் இலக்க 2023.06.12ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 11 ஆனது திருத்தியமைக்கப்பட்டு தங்கள் அனுமதிக்காக சிபார்சு செய்யப்பட்டு முன்னளிக்கப்படுகின்றது.

.....
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 11 இன் திருத்தம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு தங்கள் அனுமதிக்காக தயவுடன் சமர்ப்பிக்கப்படுன்றது.

.....
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

30/8/23

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை

.....
கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

பீ.எஸ்.எம்.சார்ள்ஸ்
ஆளுநர்
வடமாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை

கௌரவ ஆளுநர் அவர்களால் 13.07.2021 ஆம் திகதியில் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற கொள்கையின் பிரிவு 2.1 பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

2. வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படும் அலுவலர்களின் விபரங்கள்

2.1 வடக்கு மாகாணத்தின் பின்வரும் இணைந்த சேவையிலுள்ள அலுவலர்களுக்கு இவ் வருடாந்த இடமாற்றக்கொள்கையானது பொருத்தமானது.

இல	சேவை
1	மொழி பெயர்ப்பாளர் சேவை
2	அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை
3	மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை
4	இலங்கை தொழில்நுட்பவியல் சேவை (தொழிநுட்ப உத்தியோகத்தர்)
5	இலங்கை தொழில்நுட்பவியல் சேவை (படவரைஞர்)
6	மாகாண தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை (உதவியாளர்)
7	மாகாண சாரதி சேவை
8	அலுவலகப் பணியாளர் சேவை

காரணம்:- மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை – அதிசிறப்பு தரத்திற்கு புதிதாக இடமாற்றக் கொள்கை உருவாக்குதல் பொருத்தமானது.

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம் ஊடாக,

Thanuja Murugeson
Chief Secretary
Northern Province

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 2.1 ஆனது திருத்தியமைக்கப்பட்டு தங்கள் உரிய நடவடிக்கைக்காக சிபார்சு செய்யப்பட்டு தயவுடன் முன்னளிக்கப்படுகின்றது

.....

பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்

எ.அன்ரன் யோகநாயகம்
பிரதிப் பிரதம செயலாளர்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம்
வடக்கு மாகாணம்

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 2.1 இன் திருத்தம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு தங்கள் அனுமதிக்காக தயவுடன் சமர்ப்பிக்கப்படுன்றது.

.....

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை

.....

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

N.Vethanayahan
Governor
Northern Province
17/06/2026

TRUE COPY CERTIFIED CORRECT
P.Naavalan
Administ...
Provi...

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கை – திருத்தம் 03

நிரல் 1 பிரிவு	நிரல் II 2021.07.13 ஆம் திகதியில் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றக் கொள்கை	நிரல் III 2021.07.13 ஆம் திகதியில் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றக் கொள்கை – திருத்தம்	நிரல் IV காரணம்
1.அறிமுகம்	வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் இடமாற்றமானது வடக்கு மாகாண பொதுச்சேவையினை மிகவும் வினைத்திறனுடையதாகக் கொண்டு செல்வதற்கும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள பதவியணியினரின் உயர்ந்தபட்ச நலன்புரி விடயங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக்கொள்கையானது 1817/30ம் இலக்க **2013.03.07** ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் XVIIIம் அத்தியாய ஏற்பாடுகளைத் தழுவி தயாரிக்கப்பட்டு கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.	வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் இடமாற்றமானது வடக்கு மாகாண பொதுச்சேவையினை மிகவும் வினைத்திறனுடையதாகக் கொண்டு செல்வதற்கும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள பதவியணியினரின் உயர்ந்தபட்ச நலன்புரி விடயங்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும் வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக்கொள்கையானது 1817/30ம் இலக்க **2013.07.03** ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் XVIIIம் அத்தியாய ஏற்பாடுகளைத் தழுவி தயாரிக்கப்பட்டு கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.	வருடாந்த இடமாற்றக் கொள்கையின் பிரிவு 1 இல் தவறுதலாக "2013.03.07 ஆம் திகதிய" என குறிப்பிடப்பட்டமையானது 2013.07.03 ஆம் திகதிய என மாற்றியமைக்கப்படுகின்றது.
2.2 சேவை நிலையம் ஒன்றில் அலுவலர் ஒருவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சேவைக்காலம் தொடர்பான விபரங்கள்		2.2.1.1 எவ்வாறாயினும், நெடுந்தீவு பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிராத அலுவலர் ஒருவருக்கு, இடமாற்றத்தின் அடிப்படையில் நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள சேவை நிலையமொன்றில் நியமனம் வழங்கப்பட்டு, இவ் இடமாற்றக் கொள்கையின் பந்தி 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்கால கணிப்பீட்டு முறைக்கமைய ஒரு வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருப்பின், அத்தகைய அலுவலர் வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க தகுதியுடையவராக கருதப்படுவார்.	2026.05.19 ஆம் திகதிய செயலாளர் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதற்கமைவாகவும் நெடுந்தீவு பிரதேசமானது கஷ்டப் பிரதேசமாக காணப்படுகின்றமையினையும் போக்குவரத்து இடர்பாடுகளினையும் மற்றும் மத்திய அரசாங்கத்திலும் நெடுந்தீவு பிரதேசத்தின் சேவை நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற இடமாற்ற கால அளவினை கருத்திற் கொண்டும் குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற சேவை நிலையங்களில் கடமையாற்றும் நெடுந்தீவு பிரதேசத்தினை சொந்த வதிவிடமாக கொண்டிராத உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றத்திற்கு தகைமை பெறும் காலப்பகுதியானது ஒரு வருட காலமாக மாற்றியமைக்கப்படுகின்றது.

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

Recommended

பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம் ஊடாக,

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 1 திருத்தப்பட்டும், பிரிவு 2.2 இன் 2.2.1 இன் உடன் கீழ் 2.2.2.1 உப பிரிவானது சேர்க்கப்பட்டும் தங்கள் உரிய நடவடிக்கைக்காக சிபார்சு செய்யப்பட்டு தயவுடன் முன்னளிக்கப்படுகின்றது

.....
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்

பிரதிப் பிரதம செயலாளர்
நிர்வாகம்
வடக்கு மாகாணம்

கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக்கொள்கையின் பிரிவு 1 திருத்தப்பட்டும், பிரிவு 2.2 இன் 2.2.1 இன் உடன் கீழ் 2.2.2.1 உப பிரிவானது சேர்க்கப்பட்டும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டு தங்கள் அனுமதிக்காக தயவுடன் சமர்ப்பிக்கப்படுன்றது.

.....

ஆற்வாப்பிள்ளை விஜி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை

.....
கௌரவ ஆளுநர்
வடக்கு மாகாணம் 24/06/2016

M.Vethanayahan
Governor
Northern Province